# கிருபையுள்ள வார்த்தை®

**KIRUBAIYULLA VAARTHAI**

லூக்கா (LUKE) 4:22

VOL - 26
ஆண்டு சந்தா ரூ. 100/-

ஜனவரி - JANUARY
தனிப் பிரதி ரூ. 10/-

2026
வெளிநாட்டு சந்தா ரூ. 1,000/-




## உங்கள் உள்ளத்திலே என் ஆவியை வைத்து, உங்களை என் கட்டளைகளில் நடக்கவும் என் நியாயங்களைக் கைக்கொள்ளவும் அவைகளின்படி செய்யவும் பண்ணுவேன்.

எசேக்கியேல் 36:27


ஆசிரியர் Dr. பிலேமோன் ராஜா


புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவத்தை மீட்டமைக்கும் இதழ்

## இதழின் உள்ளே...


ஆசிரியர் உரை 3

பெண்கள் பகுதி 7

வாலிபர் பகுதி 9

ஓராண்டில்... வேதவாசிப்பு 11

சிறுவர் பகுதி 12



*In Memory of J.C. CHOATE*

*Guest Editors :* Betty Choate, Jerry & Paula Bates

*Editor :* Dr. P.C. PHILEMON RAJA

ஆசிரியர் குழு

V. கிங்ஸ்லி ராஜா, M.Th.,
R. ஆண்டனி ராஜா, D.Th.,
E. ஜோசப் பிரதீப், B.Th., C. கியாமிலஸ் கார்த்திக், B.Sc.,
P. பேபி ராஜா, D.Th., P. பெவர்லி லிடியா B.B.A.,

சட்ட ஆலோசகர்கள்
அட்வகேட் B. கருப்பசாமி பாண்டியன் B.A., B.L.
அட்வகேட் V. சுப்பிரமணியன் M.A., B.L.


## கிருபையுள்ள வார்த்தை TV நிகழ்ச்சிகள்

**தமிழன் T.V. யில்**
ஞாயிறு காலை 7.00 மணி

**நம்பிக்கை T.V. யில்**
ஞாயிறு மதியம் 3.30 மணி

செய்தியாளர்கள்

போதகர். பிலேமோன் ராஜா M.A., M.Th.,
(Director - JC School of Evangelism)

சகோ. கிங்ஸ்லி ராஜா M.Th.,
(இணை ஆசிரியர் – கிருபையுள்ள வார்த்தை)

இந்த மாதம் பிறந்த நாள் மற்றும் திருமண நாள் காணும் வாசகர்கள் அனைவருக்கும் அன்பின் வாழ்த்துக்கள்...



மாதந்தோறும் பார்வையற்ற மாற்றுத்திறனாளிகளுக்கு அரிசி வழங்கப்படுகிறது.

**கிருபையுள்ள வார்த்தை**
நமது ஆத்துமாவை மேம்படுத்த உதவும்
மெய் கடவுளின் வார்த்தை

YouTube
@graciouswordcoc


World Literature Publication : Kirubaiyulla Vaarthai, Post Box No. 15, Arasaradi, Madurai - 625 016. India

- P.C. பிலேமோன் ராஜா



# ஆத்துமாவை மேம்படுத்துவோம்!
## Let's uplift the soul!

அன்பான கிருபையுள்ள வார்த்தை வாசகர்கள் அனைவருக்கும் இறைமைந்தன் இயேசுகிறிஸ்துவின் பெயராலே எனது புத்தாண்டு வாழ்த்துக்கள் மற்றும் ஜெபங்கள்!

ஒவ்வொரு ஆண்டும் நாம் புதிய புதிய தீர்மானங்களை எடுப்போம். இந்த ஆண்டு நாம் நமது ஆத்துமாவை மேம்படுத்திட தீர்மானங்களை எடுத்து, நமது ஆவிக்குரிய வாழ்வினை மேன்மையுள்ளதாக்குவோம். ஒவ்வொரு ஆண்டும் சரீர சம்பந்தமான காரியங்களை அளவுக்கு அதிகமாக பரம தகப்பனிடம் கேட்டுவிட்டோம். இந்த ஆண்டு நமது ஆத்துமாவிற்கும், நமது ஆவிக்குரிய வாழ்விற்கும் தேவையானவற்றை கேட்போம்!

எசேக்கியேல் 36:26,27 "உங்களுக்கு நவமான இருதயத்தைக் கொடுத்து, உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியைக் கட்டளையிட்டு, கல்லான இருதயத்தை உங்கள் மாம்சத்திலிருந்து எடுத்துப்போட்டு, சதையான இருதயத்தை உங்களுக்குக் கொடுப்பேன். உங்கள் உள்ளத்திலே என் ஆவியை வைத்து, உங்களை என் கட்டளைகளில் நடக்கவும் என் நியாயங்களைக் கைக்கொள்ளவும் அவைகளின்படி செய்யவும்பண்ணுவேன்."

கர்த்தர் எசேக்கியேல் தீர்க்கதரிசியின் மூலமாக ஆபிரகாமின் சரீர சந்ததிக்கு சொன்னதை, ஆவிக்குரிய சந்ததியாக நமக்கும் செய்யட்டும். அவர் நமது கல்லான இருதயத்தை, நம் மாம்சத்திலிருந்து எடுத்துப்போட்டு, சதையான இருதயத்தை நமக்கு கொடுத்து, அவரது ஆவியை நம் உள்ளத்தில் வைத்து, அவருடைய கட்டளைகளில் நடக்கவும், அவருடைய நியாயங்களைக் கைக்கொள்ளவும் செய்கின்ற ஆண்டாக, இந்த ஆண்டு நமக்கு இருக்கட்டும். அதற்காக நாம் ஜெபிப்போம் மற்றும் முயற்சிப்போம்!

நமது ஆத்துமாவை மேம்படுத்த 12 காரியங்களை நான் உங்களிடம் பகிர்ந்துகொள்கின்றேன். அவற்றை 12 மாதங்களும் தியானித்து, நமது ஆத்துமா ஈடேற பிரயாசங்கொள்வோம்.

### 1. புதிய தொடக்கங்கள், புதிய அருள்: New Beginnings, Fresh Grace

ஏசாயா 43:19 "இதோ, நான் புதிய காரியத்தைச் செய்கிறேன்; இப்பொழுதே அது தோன்றும், நீங்கள் அதை அறியீர்களா? நான் வனாந்தரத்திலே வழியையும், அவாந்தரவெளியிலே ஆறுகளையும் உண்டாக்குவேன்."

கர்த்தர் எல்லாவற்றையும் புதிதாகச் செய்ய வல்லமையுள்ளவர். அவர் நமக்குள் நவமான (புதிய) இருதயத்தினை தந்து (எசேக்கியேல் 36:26), நமது ஒவ்வொரு நாளையும் புதிய கிருபையால் நிரப்பி (புலம்பல் 3:22,23), நம்மை புதிய படைப்பாக உருமாற்றட்டும் (2கொரிந்தியர் 5:17). ஆகையால், கடந்த கால வருத்தங்களை நாம் விட்டுவிட்டு, கர்த்தர் நமக்கு தந்திருக்கின்ற புதிய தொடக்கத்தினை வரவேற்போம்.

### 2. நிச்சயமற்ற நிலையில் நம்பிக்கை: Hope in Uncertainty

எரேமியா 29:11 "நீங்கள் எதிர்பார்த்திருக்கும் முடிவை உங்களுக்குக் கொடுக்கும்படிக்கு நான் உங்கள்பேரில் நினைத்திருக்கிற நினைவுகளை அறிவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார், அவைகள் தீமைக்கல்ல, சமாதானத்துக் கேதுவான நினைவுகளே."

வாழ்வில் நிச்சயமற்ற நிலைகளை, நாம் இந்த ஆண்டிலும் கடந்து வரவேண்டியதாக இருக்கும். ஆயினும் அவ்வேளைகளில் கர்த்தர் நமக்காக நல்வாழ்வு அளிக்கும் திட்டங்களை வைத்திருக்கின்றார். நம்மைக் குறித்து அவருடைய நினைவுகள் சமாதானத்திற்கு ஏதுவானவைகள் என்பதால், நம்பிக்கையுடன் அப்படிபட்ட கடின சூழலை கடந்து வெற்றிக்கொள்வோம்! சோர்விற்கு இடமளித்தால் நமது ஆத்துமாவை மேம்படுத்த முடியாமல் போய்விடும்.

நாம் செல்ல வேண்டிய பாதை தெளிவாக இல்லாத போதும் கர்த்தர் நமக்காக வைத்திருக்கின்ற எதிர்காலத்தினை நம்புவோம்!

### 3. புதுப்பிக்கப்பட்ட நோக்கம்:
### Renewed Purpose

எபேசியர் 5:15-16 "ஆனபடியினாலே, நீங்கள் ஞானமற்றவர்களைப்போல நடவாமல், ஞானமுள்ளவர்களைப்போலக் கவனமாய் நடந்து கொள்ளப்பார்த்து, நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தைப் பிரயோஜனப்படுத்திக் கொள்ளுங்கள்."

நாம் புதுப்பிக்கபட்ட நோக்கத்தினை அறிந்து, நாட்கள் பொல்லாதவைகளாக இருக்கின்ற படியினால், காலத்தினை பயன்படுத்தி, ஞானமாக நடந்துக்கொள்வோம், அன்றாட இலக்குகளை நிர்ணயம் செய்வோம் மற்றும் அவைகளை அன்றைய நாளிலேயே செய்துமுடிக்க திட்டமிடுவோம், செயல்படுவோம். நாளை என்பது இங்கே யாருக்கும் நிச்சயம் இல்லை என்பதனை நாம் அனைவரும் அறிந்தாலும், நாளைக்கு தள்ளிபோடக்கூடாத அவசியமான காரியங்களையும் தள்ளிபோடுகின்றோம். அப்படியே இந்த ஆண்டும் தொடர வேண்டாம்! உதாரணமாக, இன்றைய நாளுக்கான உங்கள் வேத வாசிப்புகளை இன்றே வாசியுங்கள்; நாளைக்கு சேர்த்து வாசித்துக் கொள்கின்றேன் என்று சொல்லாதேயுங்கள் மற்றும் நினையாதேயுங்கள். ஆத்துமாவை மேம்படுத்த வேண்டிய காரியங்களை நம்பிக்கையுடன் அன்றன்றே சீரமையுங்கள்.

### 4. மன்னிப்பின் பரிசு:
### The Gift of Forgiveness

மத்தேயு 6:14-15 "மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னித்தால், உங்கள் பரமபிதா உங்களுக்கும் மன்னிப்பார். மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னியாதிருந்தால், உங்கள் பிதா உங்கள் தப்பிதங்களையும் மன்னியாதிருப்பார்."

மன்னிப்பு என்பது ஒரு மாபெரும் பரிசு, அதனை நாம் கர்த்தரிடம் அன்றாடம் பெற வேண்டும் என்பதனைப் போல, மற்றவர்களுக்கும் அன்றாடம் கொடுக்க வேண்டும். யார் மீதும் கசப்பு கொண்டு, கோபத்துடன், வெறுப்புடன் மற்றும் வருத்தத்துடன் உங்கள் படுக்கைக்கு செல்ல வேண்டாம் (சங்கீதம் 4:4). மன்னிப்பை மானுடத்திற்கு கொடுப்போரே, மாசற்ற பிதாவிடம் இருந்து பெற முடியும் என்பதனை நினைவில்கொள்வோம். நாம் ஒன்றாக முன்னோக்கிச் செல்ல, இதயங்களைத் தூய்மைப்படுத்த, தினந்தோறும் மன்னிப்பை பரிசாக கொடுப்போம் மற்றும் பெறுவோம்! (எபேசியர் 4:24-26).

### 5. உண்மையுள்ள உக்கிராணத்துவம்:
### Faithful Stewardship

மத்தேயு 25:14,15,19-21 "அன்றியும், பரலோகராஜ்யம் புறத்தேசத்துக்குப் பிரயாணமாய்ப் போகிற ஒரு மனுஷன், தன் ஊழியக்காரரை அழைத்து, தன் ஆஸ்திகளை அவர்கள் வசமாய் ஒப்புக்கொடுத்ததுபோல் இருக்கிறது. அவனவனுடைய திறமைக்குத்தக்கதாக, ஒருவனிடத்தில் ஐந்து தாலந்தும், ஒருவனிடத்தில் இரண்டு தாலந்தும், ஒருவனிடத்தில் ஒரு தாலந்துமாகக் கொடுத்து, உடனே பிரயாணப்பட்டுப் போனான். வெகுகாலமானபின்பு அந்த ஊழியக்காரருடைய எஜமான் திரும்பிவந்து, அவர்களிடத்தில் கணக்குக் கேட்டான். அப்பொழுது, ஐந்து தாலந்தை வாங்கினவன், வேறு ஐந்து தாலந்தைக் கொண்டுவந்து: 'ஆண்டவனே, ஐந்து தாலந்தை என்னிடத்தில் ஒப்புவித்தீரே! அவைகளைக் கொண்டு, இதோ, வேறு ஐந்து தாலந்தைச் சம்பாதித்தேன்' என்றான். அவனுடைய எஜமான் அவனை நோக்கி: நல்லது, உத்தமமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே, கொஞ்சத்திலே உண்மையாயிருந்தாய், அநேகத்தின்மேல் உன்னை அதிகாரியாக வைப்பேன், உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி என்றான்."

மத்தேயு 25:14-30ல் சொல்லபட்டுள்ள தாலந்துகளின் உவமையில், தன்னிடத்தில் கொடுக்கப்பட்டவைகளில் உண்மையாக இருந்தவர்கள் பெற்ற பலன்களையும், உண்மையற்றவன் சந்தித்த விளைவுகளையும் நாம் நன்கு அறிவோம்.

2026-ல் கர்த்தர் நமக்கு கொடுத்துள்ள நேரம், திறமைகள், வளங்களை ஞானமாகப் பயன்படுத்தி, நாம் நமது பொறுப்புகளில் உண்மையாக இருப்போம். ஏன் செய்யவில்லை? என்பதற்கு காரணங்களை தேடுவதனைவிட, எப்படிச் செய்யலாம் என வழிமுறைகளைத் தேடுவது சுலபமாக இருக்கும் மற்றும் நன்மையாக இருக்கும்.

### 6. மாற்றங்களுக்கு மத்தியில் அமைதி:
### Peace amid Change

பிலிப்பியர் 4:6-7 "நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங்குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே

கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தெரியப்படுத்துங்கள். அப்பொழுது, எல்லாப் புத்திக்கும் மேலான தேவசமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக் கொள்ளும்."

வாழ்வில் பல மாற்றங்களை இந்த ஆண்டு நாம் சந்திப்போம். அவைகளை கண்டு அச்சம் கொள்ளவோ, கவலைப்படவோ வேண்டாம். எல்லா புத்திக்கும் மேலான தேவ சமாதானம் நம் இருதயங்களை ஆண்டுக்கொள்ளதக்கதாக, நாம் பயப்படுகின்ற. கவலைக்கொள்கின்ற காரியங்கள் ஒவ்வொன்றையும் கர்த்தர் தன்னிடம் தெரிவிக்க கூறியிருப்பதால் கர்த்தரிடம் ஒப்படைப்போம்! அவர் பார்த்துக் கொள்வார்.

ஏன் பயம் மற்றும கவலை வருகின்றது? மாற்றங்கள் (பிரச்சனைகள்) நமக்கு மிஞ்சினவைகளாக இருப்பதினால் தானே? நம் ஞானம், திறமை, அனுபவம் மற்றும் பல காரியங்களுக்கு அப்பாற்பட்டவைகளை, நம் பிதா பார்த்துக் கொள்கின்றேன் என்கிறார். ஆகையால் கலங்கித் தவிக்காமல் நிதானமாக நம்பிக்கையுடன் அமைதி கொள்வோம்!

### 7. ஒளியில் நடத்தல்: Walking in Light

1 யோவான் 1:7 "அவர் ஒளியிலிருக்கிறதுபோல நாமும் ஒளியிலே நடந்தால் ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப்போம். அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மைச் சுத்திகரிக்கும்."

நம் ஆத்துமா மேம்பட, நாம் அடுத்து செய்ய வேண்டியது ஒளியில் நடப்பதாகும். ஒளி வெளிச்சம், வெளிச்சம் எல்லாவற்றையும் வெளிப்படுத்தும்; ஆகையால் வெளிப்படை தன்மையுடனும், நேர்மையாகவும் மற்றும் உண்மையாகவும் நடப்போம். கிறிஸ்தவ வாழ்வு என்பதே வெளிப்படையான வாழ்வு தான் (2கொரிந்தியர் 4:2). ஆகையால், அந்தரங்கமான அவலட்சணமான காரியங்களுக்கும் நாம் நிச்சயம் விலகி இருக்க வேண்டும். உங்களை நேசிக்கின்ற பெற்றோர் மற்றும் பிள்ளைகள் முன்பாக உங்களால் உங்கள் தொலைபேசியில் பேச முடியவில்லை, பயன்படுத்த முடியவில்லை என்றால்; நீங்கள் பேசுகின்றவற்றை, பார்க்கின்றவற்றைக் குறித்து நீங்களே சோதனை செய்து பாருங்கள். ஒளியில் நடப்போம்! ஒளியான கிறிஸ்துவுடன் ஒன்றாக நடப்போம்!

### 8. பலவீனத்தில் வலிமை: Strength in Weakness

2 கொரிந்தியர் 12:9 "அதற்கு அவர்: என் கிருபை உனக்குப்போதும். பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும் என்றார். ஆகையால், கிறிஸ்துவின் வல்லமை என்மேல் தங்கும்படி, என் பலவீனங்களைக்குறித்து நான் மிகவும் சந்தோஷமாய் மேன்மைபாராட்டுவேன்."

நாம் சென்ற ஆண்டு சந்திந்த அதே உடல் பலவீனங்களையோ அல்லது புதிய உடல் பலவீனங்களையோ நாம் இந்த ஆண்டும் சந்திக்க வேண்டியிருக்கும். ஒன்றில் உறுதியாக இருங்கள். நமது பலவீனங்களில், நமது பெலமாகிய கர்த்தர் நமக்குப் பெலத்தினை தருகின்றார். மேலும், அவரது கிருபை அந்த பெலவீனத்தினை மேற்கொள்ள போதுமானதாக இருக்கின்றது. ஆகையால், நாம் எப்பொழுதெல்லாம் நம்மை பலவீனமாக உணருகின்றோமோ, அப்பொழுதெல்லாம் நமக்கான தெய்வீக பலத்தினை நம்புவோம்.

### 9. நன்றியுணர்வில் மகிழ்ச்சி: Joy in Gratitude

1 தெசலோனிக்கேயர் 5:16-18 "எப்பொழுதும்


**வாசகர்களின் கவனத்திற்கு**

அன்பான வாசகர்களே!
உங்கள் ஆண்டு சந்தா தொகையை
G-Pay, PhonePe மூலம் அனுப்பி
உங்கள் சந்தாவை
புதுப்பித்துக் கொள்ளவும்.
நன்றி!

ஆண்டு சந்தா : ரூ. 100/-
No. 92 4421 4421

வங்கிக் கணக்கில் செலுத்த,
A/c Name : Kirubaiyulla Varthai
A/c No. : 57022317422
IFSC Code : SBIN0011068
Branch : SBI - Bye Pass Road Branch, Madurai.

சந்தோஷமாயிருங்கள். இடைவிடாமல் ஜெபம்பண்ணுங்கள். எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரஞ் செய்யுங்கள். அப்படிச் செய்வதே கிறிஸ்து இயேசுவுக்குள் உங்களைக் குறித்துத் தேவனுடைய சித்தமாயிருக்கிறது."

கர்த்தரிடத்தில் எல்லாவற்றிற்கும் நன்றி செலுத்துகின்ற நன்றியுள்ளவர்களாகவும் எப்பொழுதும் மகிழ்ச்சியாக இருக்கின்றவர்களாக இருப்போம். எப்பொழும் மகிழ்ச்சியாக இருக்க, எல்லாவற்றிலும் கர்த்தரிடத்தில் நன்றியை செலுத்துகின்றவர்களாக இருப்போம். எப்பொழுதும் மகிழ்வாக இருப்பதும், எல்லாவற்றிலும் நன்றியாக இருப்பதும் ஒன்றுக்கொன்று தொடர்புடையவை என்பதனை நினைவில்கொள்வோம். ஆகையால், நன்றியுணர்வினை தினமும் பயிற்சி செய்வோம். மகிழ்ச்சியை அறுவடை செய்வோம்!

## 10. சமூகம் மற்றும் சேவை: Community & Service

கலாத்தியர் 5:13 ''சகோதரரே, நீங்கள் சுயாதீனத்திற்கு அழைக்கப்பட்டீர்கள், இந்தச் சுயாதீனத்தை நீங்கள் மாம்சத்திற்கேதுவாக அநுசரியாமல், அன்பினாலே ஒருவருக்கொருவர் ஊழியஞ்செய்யுங்கள்."

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நமக்கு சமூகத்தில் பொறுப்புகள் நிறைய இருக்கின்றன. நம்மால் இயன்றவரை எல்லாருக்கும் நன்மை செய்ய வேண்டும். அன்பினால் ஒருவருக்கொருவர் ஊழியம் செய்யுங்கள் என பரிசுத்த ஆவியானவர் நம்மை ஊக்கப்படுத்துகின்றார். குறைந்தது தினமும் ஒருவருக்காவது ஒருவேளையாவது உணவளியுங்கள் என நான் சபையாரை உற்சாகப்படுத்தினேன். அதனை உங்கள் முன் வைக்கின்றேன். தினமும் ஒருவருக்கு (திக்கற்ற/ விதவைகள்/ மாற்றுத்திறனாளி என யாராயினும்) உணவளிப்போம். பசியினால் தினமும் மடிவோர் அதிகம் என புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. நன்மைகள், நம்மைப் பிரதிபலிக்கச் செய்யாமல், கர்த்தருடைய நாமம் மகிமைப்படும்படி சபையின் மூலமாக செய்யுங்கள் (எபேசியர் 3:21).

## 11. மனந்திரும்புதல் மூலம் மாற்றம்: Transformation through Repentance

அப்போஸ்தலர் 3:20 "உங்கள் பாவங்கள் நிவிர்த்தி செய்யப்படும்பொருட்டு நீங்கள் மனந்திரும்பிக் குணப்படுங்கள்."

மனந்திரும்புலுக்கு ஏற்ற வாழ்வு வாழுங்கள், அதாவது, கனி கொடுங்கள் என யோவான் திருமுழுக்கினர் மக்களிடம் அறைகூவல் விடுத்தார் (மத்தேயு 3:8). மனந்திரும்புதல் என்பதே மாறிய வாழ்வாக இருக்க வேண்டும். மனந்திரும்புதல் என்பது பழைய பழக்கவழக்கங்களிலிருந்து விலகி, புதுப்பித்தலுக்குள் அடியெடுத்து வைத்தலாகும். ஆகையால், பழைய மனுஷனையும் அவன் செய்கைகளையும் களைந்துபோட்டு, உள்ளத்தில் புதிதான ஆவியுள்ளவர்களாக, மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாகச் சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக்கொண்ட வாழ்வு வாழ்வோம் (எபேசியர் 4:22-32).

## 12. தொலைநோக்குப் பார்வை மற்றும் விடாமுயற்சி: Vision & Perseverance

ஆபகூக் 2:2-3 "அப்பொழுது கர்த்தர் எனக்குப் பிரதியுத்தரமாக: நீ தரிசனத்தை எழுதி, அதைக் கடந்தோடுகிறவன் வாசிக்கும்படிப் பலகைகளிலே தீர்க்கமாக வரை. குறித்தகாலத்துக்குத் தரிசனம் இன்னும் வைக்கப்பட்டிருக்கிறது. முடிவிலே அது விளங்கும், அது பொய் சொல்லாது. அது தாமதித்தாலும் அதற்குக் காத்திரு. அது நிச்சயமாய் வரும், அது தாமதிப்பதில்லை."

கர்த்தரை மகிமைப்படுத்தும் இலக்குகளை நிர்ணயித்து, அதனை நோக்கி பொறுமையுடன் விடா முயற்சியுடன் செயல்படுவோம். தரிசனம் என்பது கர்த்தரை மகிமைப்படுத்துவதாக இருக்கட்டும், மாறாக, வழக்கம்போல வீடு வாங்கனும், பைக் வாங்கனும், திருமணம் செய்யனும் என உலகை நோக்கி பயணிக்காமலிருக்க பார்த்துக் கொள்ளுங்கள். கர்த்தர் நம் தேவைகளை அறிவார் (மத்தேயு 6:32). அதினதின் காரியத்தினை அதினதின் காலங்களில் செய்வார் (பிரசங்கி 3:11). ஆகையால், நாம் அவருக்காக, அவருடைய சபைக்காக என்ன செய்ய வேண்டும் என யோசிப்போம், தீர்மானிப்போம் மற்றும் செயல்படுத்துவோம்!

பிரியமானவர்களே! இந்த ஆண்டு வழக்கம்போல நமக்கு இல்லாமல் இருக்க, நாம் வழக்கம் போல உலகத்தினை மையப்படுத்தி வாழாமல், உன்னதமான பிதாவை மகிமைப்படுத்தும்படி, நம் ஆத்துமாவை மேம்படுத்த வாழுவோம். உங்கள் ஆத்துமா வாழ்வதுபோல எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகித்திருங்கள் என, கர்த்தருடைய நாமத்தினாலே நான் உங்களுக்கு புத்தாண்டு ஆசீர்கூறுகின்றேன். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

– அன்புடன், ஆசிரியர்

# கைவிடாதவர், விட்டு விலகாதவர்

கர்த்தருக்குள் பிரியமான சகோதரிகள் அனைவருக்கும் இயேசு ராஜாவின் பெயரில் வாழ்த்துக்கள்! ஜெபங்கள்!

இந்த புதிய வருடத்திலே கர்த்தருக்குள் நாம் எடுக்கும் அனைத்து முயற்சிகளிலும் கர்த்தர் நம்மோடே இருப்பாராக.

அன்புக்குரியவர்களே! அன்று யோசுவாவோடே அவர் இருப்பேன் என்று வாக்குக் கொடுத்ததுப்போல இன்றுவரை நம்மோடு இருப்பவர் அவர்.

யோசுவா 1:5-9-ல் நாம் வாசிக்கும்போது மோசே மரித்த பின்பு இஸ்ரயேல் மக்களை வழிநடத்தும் அந்த மாபெரும் பொறுப்பு யோசுவாவினிடத்தில் கொடுக்கப்பட்டது, வாக்குத்தத்தம் செய்யப்பட்ட தேசத்திற்கு அழைத்து செல்லும் வேலை அவரிடத்தில் வழங்கப்பட்டது.

தொடர்ந்து வசனங்களை வாசிக்கும்போது அங்கு மூன்றுமுறை யோசுவா 1:5-9ல் வலிமையாகவும், தைரியமாகவும் இருக்க வேண்டும் என்று கர்த்தர் கூறுகின்றார்.

நாமும்கூட கிறிஸ்துவுக்குள் வாழ்வை தெரிந்துகொண்ட பின்பு நாம் இயேசுவை பின் தொடரும் காரியங்களில் பின்வாங்காமல் இருக்க வேண்டும் (லூக்கா 9:23-26) நாம் கிறிஸ்தவ வாழ்வில் வெற்றி பெற தைரியமாக இருக்க வேண்டும் (எபே. 6:10;கொலோ. 3:17; சங். 27:14).

கடவுளை நம்புகிறவர்கள், விசுவாசிக்கிறவர்கள், வலிமையாகவும், தைரியமாகவும் இருக்க வேண்டும். நாம் இயேசுவைப்போல மாறுவதே அவருக்குக் கீழ்ப்படிவதே நம்முடைய மாபெரும் கடமையாக இருக்க வேண்டும். நமக்கென்று அவர் திட்டம் வைத்திருக்கிறார். அதற்கென்று நாம் அர்ப்பணித்து வாழ வேண்டும்.

கிறிஸ்துவின் சேவையில் எப்படி நம் வாழ்வை வாழ வேண்டுமென்று அவர் நமக்கு வழிக்காட்டுதல் கொடுத்து இருக்கிறார் (ரோமர் 12:1,2).

யோசுவா எப்படி தன்னோடே கர்த்தர் இருப்பார் என்று நம்பிக்கையுடன் வாழ்ந்தாரோ, அதேபோல நாமும் நம் வாழ்வை வாழ வேண்டும் (மத். 28:20; எபி. 13:5,6). இந்த வசனங்கள் அவர் நம்மோடே இருக்கிறார் என்ற வாக்குறுதியை கொடுக்கின்றது.

## கடவுளுக்குக் கீழ்ப்படிய.... (யோசுவா 1:7,8):

யோசுவாவுக்கும் நியாயப்பிரமாணத்திற்கு கீழ்ப்படிந்து வாழ வேண்டும் என்று கட்டளை கொடுக்கப்பட்டது. நமக்கும் இன்று கடவுளுக்கு கீழ்ப்படிந்து வாழ வேண்டும் என்று சட்டம் இருக்கின்றது (2 தீமோ. 3:16.17; 2 பேதுரு 1:20.21).

கீழ்ப்படிதலில் முதல் முறையாக நாம் வசனத்திற்கு கீழ்ப்படிந்து நாம் கிறிஸ்துவை நம் சொந்த இரட்சகராக

(தொடர்ச்சி... ௮ம் பக்கம்)

## அறிந்து கொள்வோம்

## மாதம் ஒரு “பூ” வகுளம்



மகிழம் அல்லது வகுளம் அல்லது இலஞ்சி அல்லது மகிழ் என்பது ஓர் சிற்றின மரம் ஆகும். இம்மரம் தெற்கு ஆசியா, வடக்கு ஆஸ்திரேலியாவில் உள்ள வெப்பமண்டல காடுகளில் காணப்படும் ஒரு நடுத்தர அளவிலான பசுமையான மரமாகும். இந்த மரத்தைப் பொதுவாக ஆங்கிலத்தில் ஸ்பானிஷ் செர்ரி, மெட்லர், புல்லட் உட் என்று அழைக்கின்றனர். இதன் மரக் கட்டை விலைமதிப்பு மிக்கது, இதன் பழம் உண்ணத்தக்கது, மேலும் இதன் பட்டை, பூ போன்றவை பாரம்பரிய மருத்துவத்தில் பயன்படுத்தப்படுகிறது. இந்த மரமானது நல்ல நிழல் தருவதாகவும், வாசம் மிகுந்த மலர்களைக் கொண்டதாலும், இது தோட்டங்களில் வளர்க்கப்படுகிறது. இதன் மலர் தாய்லாந்தின் யலா மாகாணத்தின் மாகாண மலர் ஆகும்.

மகிழம் பூ. இதன் பழம் சாப்பிட உகந்தவை. இதன் பழத்தைப் பழங்காலத்தில் மருத்துவத்தில் பயன்படுத்தினர். இம்மரம் 16 மீட்டர் வரை வளரக்கூடியது. மார்ச் மாதத்தில் பூத்து ஜூன் மாதத்தில் பழுக்கும். இதன் இலைகள் பளபளப்பாக இருக்கும். இதன் மலர்கள் நறுமணம் கொண்டவை. மணம் மிக்க பூவை மகளிர் தலையில் அணிந்துகொள்வர். இதன் சாற்றினை ஊதுபத்தியில் மணம் சேர்க்கவும், மண-எண்ணெய் மணப்பொடி முதலானவற்றைச் செய்யப் பயன்படுத்துகின்றனர்.

ஏற்றுக்கொண்டு வாழ வேண்டும். பரிசுத்த ஆவியானவர் நமக்கு துணையாக இருந்து வழிநடத்துவார் (ரோமர் 5:1; 8:1-9).

நமக்கு செழிப்பும், வெற்றியும் நம் வாழ்வில் வந்து சேர நாம் நமது இரட்சகர் சொல்லைக் கேட்டு வாழ வேண்டும் (மத். 25:21).

## கடவுளின் வார்த்தையை நினைவில் வைத்து அதைப்பற்றி சிந்திக்க வேண்டும்:

நாம் நேசிக்கும் மனிதர்களின் வார்த்தையை நாம் நினைவில் வைத்து அதைப்பற்றி சிந்திக்க வேண்டும். (சங். 1:1-3).

ஆம் பிரியமானவர்களே! நாம் கர்த்தருக்காக வாழ வேண்டும் என்று உறுதியுடன் வாழும்பொழுது கர்த்தர் நம்மோடும் இருப்பார். வேதாகமத்திலே அநேக பெண்கள் தங்கள் வாழ்வை கர்த்தருக்கென்று ஒப்புக்கொடுத்து, கடவுளின் வார்த்தைக்கு கட்டுப்பட்டு கீழ்ப்படிந்து வாழ்ந்தனர். அதில் சில பெண்களைப் பற்றி இங்கு காண்போம்.

**ராகாப்:** மனுஷனுக்கு பயப்படாமல் தேவபிள்ளைகளைக் காப்பாற்ற முழு முயற்சி எடுத்து துணிச்சலாக செயல்பட்டாள்.

**எஸ்தர்:** மனுஷனுக்கு (ராஜாவிற்கு) பயப்படாமல், தேவ பிள்ளைகளுக்கு துணிந்து செயல்பட்டு அவர்களைக் காப்பாற்றினாள்.

**ரூத்:** இஸ்ரயேலின் தேவனை தன் சொந்த தெய்வமாக ஏற்றுக்கொண்டாள்.

**மரியாள்:** தன்னிடத்தில் உண்டானது எப்படிப்பட்டதோ என்று தயக்கமடைந்தாலும் பின்வாங்காமல் தேவ துணையோடே இயேசுவை தன் வயிற்றில் சுமந்து பெற்றெடுத்தவள்.

**அன்னாள்:** கர்த்தரிடத்தில் கேட்டு பெற்றுக்கொண்ட பிள்ளையை கர்த்தருக்கென்று ஒப்புக்கொடுத்தவள்.

இவர்கள் யோசுவாவைப்போல தேவனுக்காக தெரிந்துகொள்ளப்பட்டு தேவசித்தம் நிறைவேற தங்கள் வாழ்வை அர்ப்பணித்து வாழ்ந்தவர்கள், தேவன் அவர்களோடே இருந்தார்.

தேவதிட்டம்/தேவசித்தம் தங்கள் வாழ்வில் நிறைவேற தங்களை முழுமையாக ஒப்புக்கொடுத்தார்கள்.

உலகத்தில் எத்தனை போராட்டம் வந்தும் தேவ பலமும், தேவ தைரியமும் அவர்களுக்குள் இருந்தது. அதுவே அவர்களை கிறிஸ்தவ வாழ்வில் தொடர்ந்து ஓடச் செய்தது. அதுபோல நாமும் தேவ வார்த்தையில் நிலைத்திருக்கும்போது, அவர் நம்மோடு இருப்பேன் வாக்குக்கொடுத்திருக்கிறார். (மத். 28:18,19).

"..பலங்கொண்டு திடமானதாயிரு. ..நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை; உன்னை கைவிடுவதுமில்லை" கர்த்தரின் கிருபையோடு, அடுத்த இதழில் சந்திப்போம்!

சகோதரி. **பெவர்லி கிங்ஸ்லி**

# Gospel Through Media by Evangelism Team

**Philemon & Kingsly in Tamil: Tamilan TV:** Sunday 7:00 - 7:15 am.
**Nambikkai TV:** Sunday 3:30 - 4:00 pm.

**Rajanayagam & Benny Martin in Tamil: Nambikkai TV:** Tuesday 6:30-7:00 am & Friday 7:30 - 8:00 am

**Arjunan in Tamil:** Every Monday - Saturday 6:00 pm on **Joy TV.**

**Hindi TV program: Sunny, Francis, & Vinay David:** Sunday (7:00-7:30) pm, Friday 8:00-8:30 pm All on **Subha Sandesh** Hindi Channel

**P. K. Varghese in Malayalam:** Every Saturday 6:00-6:30 am on **Jai Hind TV.**

**Joshua & Ricky Gootam in Telugu:**
Every Sunday at 6:00-6:30 p.m. on **Subhavartha TV.**
Saturday at 6:00-6:30 a.m. on **Araadhana TV.**
Every day at 7:00 a.m. and 3:00 p.m. on **Kanthi TV** in A. P. only.

**Amul Bansod – Aurangabad (Marathi)**

**MCN News** channel: Monday, Wednesday, Friday – 7:30 AM to 8:00 AM.

# ஆண்டவர் இயேசுவின் உவமைகள் அறிமுகம்

இயேசுவின் உவமைகள் பைபிளின் ஒரு முக்கிய பகுதியாகும். மனித குலத்துடன் பகிர்ந்து கொள்ளத் தேவையான ஆழமான ஆன்மீக உண்மைகளை எளிமையாக்கும் ஞானம் இயேசுவுக்கு இருந்தது, அவற்றைப் புரிந்துகொள்ள எளிதான தொடர்புடைய கதைகளின் வடிவத்தில் வழங்குகிறார். ஒரு உவமை என்பது மிகவும் ஆழமான, மதிப்புமிக்க தார்மீக பாடத்தை விளக்குவதற்கு ஒரு எளிய, பொதுவான விஷயத்தைப் பற்றிய ஒரு கதை. 'உவமை' என்ற வார்த்தையின் மூல வரையறை என்பது ஒப்பிடுவதற்கு அருகருகே ஒரு இடத்தைக் குறிக்கிறது.

சில சமயங்களில், நற்செய்தி ஆசிரியர்கள் ஒரு உவமையை ஒரு ஒப்புமையுடன் தொடங்குகிறார்கள், உதாரணமாக, 'பரலோக ராஜ்யம் தனது திராட்சைத் தோட்டத்திற்கு வேலையாட்களை வேலைக்கு அமர்த்த விடியற்காலையில் சென்ற ஒரு நில உரிமையாளர் போன்றது' (மத்தேயு 20:1). அல்லது அன்பையும் கருணையையும் வலியுறுத்த நல்ல சமாரியனின் உவமை அல்லது ஜெபத்தில் விடாமுயற்சியைக் காட்ட நள்ளிரவில் நண்பரின் உவமை போன்ற ஆன்மீக உண்மையை வெளிப்படுத்த இயேசு அன்றாட வாழ்க்கையிலிருந்து ஒரு உதாரணத்தை வழங்கலாம்.

ஒரு உவமை முழுவதையும் பயன்படுத்தி ஆன்மீக பாடத்தை உருவாக்குகிறது, அதேசமயம் ஒரு பழமொழி, உருவகம், உவமை அல்லது பேச்சு உருவகம் பொதுவாக ஒரு சொல், சொற்றொடர் அல்லது வாக்கியத்தை மையமாகக் கொண்டுள்ளது. கீழே உள்ள பைபிள் வசனங்களின் தொகுப்பில் மத்தேயு, மாற்கு மற்றும் லூக்கா புத்தகங்களிலிருந்து இயேசுவின் பல உவமைகளைக் கண்டறியவும்!

Parable என்பதன் தமிழ் அர்த்தங்கள் உவமை, நீதிக்கதை, உருவகக்கதை, அறநெறிக் கதை ஆகும், இது ஒரு போதனை அல்லது கொள்கையை விளக்க மனித கதாபாத்திரங்களைக் கொண்ட ஒரு சிறிய, உருவகக் கதையைக் குறிக்கிறது, குறிப்பாக இயேசு பயன்படுத்திய மதக் கதைகளைக் குறிக்கப் பயன்படுத்தப்படுகிறது.

பைபிளில் இயேசு கூறிய உவமைகள் Parables என்பவை, கடவுளின் ராஜ்ஜியத்தைப் பற்றிய ஆழமான ஆன்மீக உண்மைகளை எளிமையான கதைகள் மூலம் விளக்கும் போதனைகளாகும்; இதில் விதைக்கிறவன், நல்ல சமாரியன், தள்ளாடும் மகன், முதிர் கன்னிப்பெண்கள், (Talents) திராட்சைத் தோட்டம் போன்ற பல பிரபலமான உவமைகள் உள்ளன. அவை மனந்திரும்புதல், விசுவாசம், அன்பு, கிருபை, பொறுமை போன்ற பாடங்களை போதிக்கின்றன.


## உவமைகளின் நோக்கம்:

கடவுளின் ராஜ்ஜியத்தின் இயல்பை வெளிப்படுத்துவது.

கேட்போரின் மனதைச் சவாலுக்குட்படுத்தி, அவர்களைச் சிந்திக்க வைப்பது.

ஆன்மீக உண்மைகளை எளிமையான, நினைவில் கொள்ளக்கூடிய கதைகள் மூலம் போதிப்பது.

பைபிளின் புதிய ஏற்பாட்டில், குறிப்பாக மத்தேயு, மாற்கு மற்றும் லூக்கா ஆகிய நற்செய்தி நூல்களில்



இயேசுவின் உவமைகள் விரிவாகக் காணப் படுகின்றன

இயேசு தனது பிறப்பில் உலகையே மாற்றினார்: கடவுள் மனிதரானார். அவரது மரணமும் உயிர்த்தெழுதலும் நித்தியத்தை மாற்றி, மரணத்தை வென்று மற்றவர்களுக்கு இரட்சிப்புக்கான பாதையை அமைத்துக் கொடுத்தது.

இயேசுவின் குறுகிய பொது ஊழியத்தில், அவரது வார்த்தைகள் மனித குலத்தை மாற்றியமைத்தன, வழக்கமான ஞானத்தை சவால் செய்தன, ஊழியர் தலைமையை வெளிப்படுத்தின, பூமியில் கடவுளின் ராஜ்யத்தைக் கட்டியெழுப்ப ஒரு தீவிரமான அன்பை வெளிப்படுத்த அவரைப் பின்பற்றுபவர்களை அழைத்தன.

அவர் இதை பெரும்பாலும் உவமைகள் மூலம் செய்தார். நற்செய்திகளில் பதிவாகியுள்ள இயேசுவின் வார்த்தைகளில் பெரும்பகுதி உவமைகளால் ஆனது. அவர் தனது மறக்கமுடியாத பாடங்களை உவமைகள் மூலம் வழங்கினார். 'நல்ல சமாரியன்' மற்றும் 'கெட்ட மகன்' போன்ற சொற்கள் மதத்தைக் கடந்து, அனைத்து மதத்தினரும் அங்கீகரிக்கும் சொற்களாக மாறிவிட்டன.

"இவைகளையெல்லாம் இயேசு ஜனங்களோடே உவமைகளாகப் பேசினார்; உவமைகளினாலே யன்றி, அவர்களோடே பேசவில்லை." (மத்தேயு 13:34).

கர்த்தருக்குள் பிரியமான வாலிபர்களே! தொடர்ந்து நாம் ஆண்டவர் இயேசுவினுடைய உவமைகளையும் அதனுடைய ஆவிக்குரிய அர்த்தங்களையும் இந்த ஆண்டு முழுவதும் நாம் தியானிப்போம். கர்த்தர் தாமே நம்மை ஆசீர்வதித்து வழிநடத்துவாராக. ஆமென்.

– உங்கள் அண்ணன் **JP**

## பொதுவான செய்திகள்

# முதல்வரின் புதிய ஓய்வூதியத் திட்டத்தின் அம்சங்கள் என்ன?

1. மாநில அரசு அலுவலர்கள் பெற்ற கடைசி மாத ஊதியத்தில் 50 சதவீதம் உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியமாக வழங்கப்படும். இவ்வாறு 50 சதவீதத்திற்கு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியம் வழங்குவதற்கு, பணியாளர்களின் 10 சதவீத பங்களிப்போடு, ஓய்வூதிய நிதியத்திற்குத் தேவைப்படும் கூடுதல் நிதி முழுவதையும் தமிழ்நாடு அரசே ஏற்கும்.
2. 50 சதவீதம் உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியம் பெறும் ஓய்வூதியதாரர்களுக்கு ஆண்டுதோறும் ஆறு மாதத்திற்கு ஒருமுறை அரசு அலுவலர்களுக்கு வழங்கப்படுவதற்கு இணையான அகவிலைப்படி உயர்வு அளிக்கப்படும்.
3. ஓய்வூதியதாரர் இறந்துவிட்டால் அவர் ஏற்கெனவே பரிந்துரைத்த குடும்ப உறுப்பினர்களுக்கு அவர் பெற்று வந்த ஓய்வூதியத்தில் 60 சதவீதம் குடும்ப ஓய்வூதியமாக வழங்கப்படும்.
4. அரசு அலுவலர்கள் ஓய்வு பெறும் போதும், பணிக்காலத்தில் இறக்க நேரிடும் போதும், அவரவரின் பணிக்காலத்திற்கேற்ப 25 லட்சம் ரூபாய்க்கு மிகாமல் பணிக்கொடை வழங்கப்படும்.
5. புதிய உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டம் செயல்படுத்தப்பட்டபின், ஓய்வூதியம் பெறுவதற்கான தகுதிப் பணிக்காலத்தை நிறைவு செய்யாமல் பணி ஓய்வு பெறும் அனைத்து அலுவலர்களுக்கும் குறைந்தபட்ச ஓய்வூதியம் வழங்கப்படும்.
6. பங்களிப்புடன் கூடிய ஓய்வூதியத் திட்டத்தின் (Contributory Pension Scheme) கீழ் பணியில் சேர்ந்து, புதிய தமிழ்நாடு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியம் செயல்படுத்தப்படுவதற்கு முன்னர் இடைப்பட்ட காலத்தில் ஓய்வூதியம் இன்றி பணி ஓய்வு பெற்றவர்களுக்கு சிறப்பு கருணை ஓய்வூதியம் வழங்கப்படும்.

# ஓராண்டில் திருமறையை வாசித்து முடிக்க....



## ஜனவரி

| காலை | மத்தேயு | மாலை ஆதியாகமம் |
|---|---|---|
| 1. | 1 | 1-3 |
| 2. | 2 | 4-6 |
| 3. | 3 | 7-9 |
| 4. | 4 | 10-12 |
| 5. | 5:1-26 | 13-15 |
| 6. | 5:27-48 | 16,17 |
| 7. | 6:1-18 | 18,19 |
| 8. | 6:19-34 | 20-22 |
| 9. | 7 | 23,24 |
| 10. | 8:1-17 | 25,26 |
| 11. | 8:18-34 | 27,28 |
| 12. | 9:1-17 | 29,30 |
| 13. | 9:18-38 | 31,32 |
| 14. | 10:1-20 | 33-35 |
| 15. | 10:21-42 | 36-38 |
| 16. | 11 | 39,40 |
| 17. | 12:1-23 | 41,42 |
| 18. | 12:24-50 | 43-45 |
| 19. | 13:1-30 | 46-48 |
| 20. | 13:31-58 | 49,50 |
| | | **யாத்திராகமம்** |
| 21. | 14:1-21 | 1-3 |
| 22. | 14:22-26 | 4-6 |
| 23. | 15:1-20 | 7-8 |
| 24. | 15:21-39 | 9 -11 |
| 25. | 16 | 12,13 |
| 26. | 17 | 14,15 |
| 27. | 18:1-20 | 16-18 |
| 28. | 18:21-35 | 19,20 |
| 29. | 19 | 21,22 |
| 30. | 20:1-16 | 23,24 |
| 31. | 20:17-34 | 25,26 |

## பிப்ரவரி

| காலை | மத்தேயு | மாலை யாத்திராகமம் |
|---|---|---|
| 1. | 21:1-22 | 27,28 |
| 2. | 21:23-46 | 29,30 |
| 3. | 22:1-22 | 31-33 |
| 4. | 22:23-46 | 34,35 |
| 5. | 23:1-22 | 36-38 |
| 6. | 23:23-39 | 39,40 |
| | | **லேவியராகமம்** |
| 7. | 24:1-28 | 1-3 |
| 8. | 24:29-51 | 4,5 |
| 9. | 25:1-30 | 6,7 |
| 10. | 25:31-46 | 8-10 |
| 11. | 26:1-25 | 11,12 |
| 12. | 26:26-50 | 13 |
| 13. | 26:51-75 | 14 |
| 14. | 27:1-26 | 15,16 |
| 15. | 27:27-50 | 17,18 |
| 16. | 27:51-66 | 19,20 |
| 17. | 28 | 21,22 |
| | **மாற்கு** | |
| 18. | 1:1-22 | 23,24 |
| 19. | 1:23-45 | 25 |
| 20. | 2 | 26,27 |
| | | **எண்ணாகமம்** |
| 21. | 3:1-19 | 1,2 |
| 22. | 3:20-35 | 3,4 |
| 23. | 4:1-20 | 5,6 |
| 24. | 4:21-41 | 7,8 |
| 25. | 5:1-20 | 9-11 |
| 26. | 5:21-43 | 12-14 |
| 27. | 6:1-29 | 15,16 |
| 28. | 6:30-7:13 | 17- 22 |

அடுத்த இதழில்...

★ கொடுக்கப்பட்டுள்ள வேதாகம பகுதிகளை வாசித்து முடித்தவுடன் அருகில் உள்ள கட்டத்தில் ☑ செய்யவும்..


**வேதாகமத்தை முறையாக கற்றுக்கொள்ள: 92 4421 4421, 92 4431 4431**

# யாக்கோபு கானானுக்கு திரும்புதல்

ஆதியாகமம் 31-ம் அதிகாரம்

ஹாய் குட்டீஸ் சென்ற ஆண்டு முழுவதும் உங்களை தாலாட்டி, சீர்படுத்தி, சுகத்தையும், பலத்தையும் கொடுத்த சர்வ வல்லமையுள்ள கர்த்தருக்கு நன்றி சொன்னீர்களா? சென்ற ஆண்டு போல இந்த ஆண்டும் உங்களை கர்த்தர் வழிநடத்தும்படி வேண்டிக்கொண்டு நன்றி சொன்னீர்களா?

இந்த மாதம் யாக்கோபு மாமாவை குறித்து படிக்கலாமா? பதான் அராம் என்னும் ஊரிலே லாபான் என்னும் பேர் கொண்ட ஒரு மனிதன் வாழ்ந்து வந்தார். லாபான் ஆடுகளை வளர்க்கவும், அவைகளை பராமரிக்கவும் வேலை செய்து கொண்டு வந்தான். லாபனுக்கு இரண்டு மகள்கள் இருந்தார்கள். அந்த சமயத்தில் கானான் தேசத்தில் வாழ்ந்து வரும் ஈசாக்கு தன் மகன் யாக்கோபை அழைத்து நீ உன் தாயாகிய ரெபேக்காளின் சகோதரன் லாபனின் மகளை திருமணம் செய்து கொண்டு வரும்படியாக தன் மாமன் வீட்டுக்கு அனுப்பினான்.



அப்படியே யாக்கோபு நெடுந்தூரம் வழி நடந்து தன் மாமன் வீட்டுக்கு சென்றான். அங்கே முதல் ஏழு வருஷம் தன் மாமனுக்கு வேலை செய்தான். லாபான் தன் மூத்த மகளை யாக்கோபுக்கு திருமணம் பண்ணிக்கொடுத்தான். மீண்டும் ஏழு வருஷம் வேலை செய்தான். தன் மாமனாகிய லாபான் சம்பளம் கொடுக்காமல் ஏமாற்றிக் கொண்டே வந்தான். அப்பொழுது யாக்கோபு இனி நாம் இங்கே இருக்க வேண்டாம் என்று நினைத்து, தன் மனைவியையும், பிள்ளைகளையும் கூட்டிக்கொண்டு தன் தகப்பனாகிய ஈசாக்கு இருக்கும் கானான் தேசத்திற்கு திரும்பிப் போக புறப்பட்டான்.

ஆம், மழலை செல்லங்களா! கானான் தேசம் என்பது கர்த்தர் தெரிந்துகொண்ட தேசம். கர்த்தராலே நேசிக்கப்பட்ட தேசமுமாய் இருக்கிறது. யாக்கோபு நானும் என் குடும்பமும், கர்த்தரும், என் தகப்பனும் இருக்கிற தேசத்துக்கு போவோம் என்று தன் குடும்பத்தை வழிநடத்தி சென்றான்.

சிறு பிள்ளைகளே! இதிலிருந்து நீங்கள் கற்றுக்கொண்ட பாடம் என்ன? கானான் தேசம் என்பது இன்று இருக்கிற கிறிஸ்துவின் சபையை குறிக்கிறது. இந்த கிறிஸ்துவின் சபையை கர்த்தர் மிகவும் நேசிக்கிறார். இந்த சபைக்காகத்தான் பிதாவானவர் தமது குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை பலியாக சிலுவையிலே கொடுத்தார். நீங்களும்கூட எங்கு சென்றாலும் வந்தாலும் பள்ளிக்குச் செல்லும்பொழுதும், திரும்பும் பொழுது, எல்லா நேரங்களிலும் பிதாவிடம் பிரார்த்தனை செய்து கொண்டு தினமும் ஒரு வசனத்தை மனப்பாடம் செய்து கொண்டு உங்கள் பெற்றோர்களிடம் ஒப்புவிக்கவும் கர்த்தர் உங்களிடம் கேட்கிறார்.

அதேபோல சபையை நேசிப்பவர்களாகவும், சபையில் உள்ள பெரியவர்களுக்கு கீழ்ப்படிந்து நடக்கக் கூடியவர்களாகவும் இருங்கள். சர்வ வல்லமையுள்ள கர்த்தர் இந்த ஆண்டு முழுவதும் உங்களை காப்பாராக ஆமென்.

**மனப்பாட வசனம்: சங்கீதம் 64:10**

"நீதிமான் கர்த்தருக்குள் மகிழ்ந்து, அவரை நம்புவான்..."

– சகோ. பீட்டர்

## சிறுவர் பகுதி பதில் எழுதியவர்கள்

1. A. சுபிக்ஷா - பெருமாள் வலசு
2. D. டே∴ப்னி - சென்னை
3. D. ஜூனித்தா - சென்னை
4. M. அபி பிலேமோன் - எழுகம்வலசு
5. J. நவீன் பீட்டர் - மதுரை
6. J. கிறிஸ்டினா ஜாய்ஸ் - மதுரை
7. S. ஜூடா லியோ - ரஸ்தா
8. G. ஜெர்லின் - ரஸ்தா
9. A. ஹானா ஜோதிராணி - மதுரை
10. A. ஆடின் ∴போயோ - ராணிபேட்டை
11. S. ஜோசுவா - ராணிபேட்டை
12. S. ஜூடித் ஆராதனா - ராணிபேட்டை
13. S. ஆலன் காலேப் - ராணிபேட்டை
14. M. ஜோனத்தான் - கரூர்
15. V. ஏஞ்சல் ஜோயன்னா - மதுரை

## சிறுவர்களுக்கான கேள்விகள்

1. யாக்கோபின் மாமன் பெயரென்ன? அவரது ஊர் எது?
2. கானான் தேசம் எப்படிப்பட்டது என்று யாக்கோபு அறிந்திருந்தார்?
3. ஆகார் கர்த்தருக்கு என்ன பெயரிட்டாள்?
4. சூனேமிய ஸ்திரீ தனக்கு பிரச்சனை வரும்போது எப்படியிருந்ததாய் நீங்கள் படித்தீர்கள்?
5. தாவீது எதற்கு ஓர் சிறந்த உதாரணம் என்று நீங்கள் படித்தீர்கள்?

# லகாய்ரோயீ

ஹாய் குட்டீஸ்! உயிர்த்தெழுந்த ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்கள் அனைவருக்கும் என் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்,

ஆபிரகாம் – சாராள் தம்பதிகளுக்கு ரொம்ப நாட்களாக குழந்தை இல்லாமல் இருந்தது. அதினால் சாராள் என்ன செய்தாங்க தெரியுமா? அவர்கள் வீட்டில் தனக்கு அடிமைப் பெண்ணாக இருந்த ஆகார் என்பவளை தன் கணவராகிய ஆபிரகாமுக்கு மறுமனைவாட்டியாக கொடுத்தார். சில நாட்களுக்குப் பிறகு ஆகார் கர்ப்பவதியானார். அதினாலே பிள்ளையில்லாத தன் எஜமானியாகிய சாராளை அற்பமாக எண்ணினார்.

ஆகார் தன்னை அற்பமாக எண்ணினபடியால், சாராள் அவளை ரொம்ப கடினமாய் நடத்தினார். அதைத் தாங்க முடியாமல் ஆகார் சாராளைவிட்டு ஓடிப்போனாள். அவள் வனாந்திரத்திலே இருக்கிற ஒரு நீரூற்றண்டையில் இருக்கையில் கர்த்தருடைய தூதனானவர் அவரை கண்டு: எங்கேயிருந்து வருகிறாய்? எங்கே போகிறாய்? என்று கேட்டார். அதற்கு அவள்: நான் என் எஜமானியாகிய சாராளைவிட்டு ஓடிப்போகிறேன் என்றாள். அப்பொழுது கர்த்தருடைய தூதனானவர் நீ உன் எஜமானிடம் திரும்பிப்போய். அவள் கையின்கீழ் அடங்கியிரு என்றார்.

மேலும் அவர்: நீ கர்ப்பவதியாயிருக்கிறாய், ஒரு குமாரனைப் பெறுவாய்; கர்த்தர் உன் அங்கலாய்ப்பைக் கேட்டபடியினால், அவனுக்கு இஸ்மயேல் என்று பேரிடுவாயாக. அவன் துஷ்ட மனுஷனாயிருப்பான்; அவனுடைய கை எல்லாருக்கும் விரோதமாகவும் எல்லாருடைய கையும் அவனுக்கு விரோதமாகவும் இருக்கும். தன் சகோதரர் எல்லாருக்கும் எதிராகக் குடியிருப்பான் என்றார்.

அப்பொழுது ஆகார்: என்னைக் காண்பவரை நானும் இவ்விடத்தில் கண்டேன் அல்லவா! என்று சொல்லி, தன்னோடே பேசின கர்த்தருக்கு "நீர் என்னைக் காண்கிற தேவன்" என்று பேரிட்டாள். ஆகையால், அந்த நீரூற்று இருந்த துரவுக்குப் பெயர் "லகாய்ரோயீ" என்னப்பட்டது.

**மனப்பாட வசனம்: சங்கீதம் 104:34**

" நான் அவரைத் தியானிக்கும் தியானம் இனிதாயிருக்கும்; நான் கர்த்தருக்குள் மகிழுவேன்"

– சகோதரி. குயினி பிரதீப்

சிறுவர் பகுதி

# சூனேமிய ஸ்திரீ

2 இராஜாக்கள் 4ம் அதிகாரம்

கடவுளுடைய செல்லங்களா? நீங்கள் எல்லாரும் எப்படியிருக்கிறீர்கள், நல்லாயிருக்கிறீர்களா? புது வருடம் எப்படி போனது, நல்ல தீர்மானம் எடுத்தீர்களா?

இப்பக் கூட பைபிளில் சூனேமியாள் என்ற ஒரு அக்கா இருக்காங்க அவங்களைப் பற்றி பார்க்கலாமா?

யார் இந்த சூனேமியாள் தெரியுமா?

இஸ்ரயேலில் உள்ள சூனேம் என்ற ஊரில் வாழ்ந்த இவங்களுக்கு குழந்தை இல்லை. இவங்க கடவுள் மீது அதிகமான அன்பும், நம்பிக்கையும் உள்ளவங்க இந்த அக்கா. கடவுளுக்கு வேலை செய்கிறவர்களை மதிக்கக் கூடியவங்க, எலிசா என்ற ஊழியர் வரும்போதெல்லாம் உணவு கொடுத்து, தங்க இடமும் கொடுத்து உபசரிப்பாங்க, எப்படி தெரியுமா? சூனேமியாளும் அவங்க கணவரும் சேர்ந்து அவங்க வீட்டு மேல் ஒரு அறை இருந்தது. அதை சுத்தம் செய்து, ஒரு மேஜை வைத்து, மற்றும் ஒரு நாற்காலி, வெளிச்சத்துக்கு விளக்கு வைத்து தயார் செய்து எலிசா என்ற ஊழியக்காரர் வரும்போது எல்லாம் அவங்களை தங்க வைப்பாங்க, அது மாத்திரம் அல்ல பசிக்கு உணவும் கொடுப்பாங்க, இதை அன்போடு செய்வார்கள். எந்தவித எதிர்பார்ப்பும் இல்லாமல் இதை செய்வார்கள். எப்படி தெரியுமா? இவங்களுக்கு குழந்தை இல்ல, ஒருமுறை எலிசா உங்களுக்கு நான் என்ன செய்ய வேண்டும், உங்களுக்கு எதாவது தேவைகள் இருக்கிறதா? என்று கேட்டார். அதற்கு சூனேமியாள் என்ன சொன்னாங்க தெரியுமா? நான் நல்லா இருக்கிறேன், ஒன்றும் வேண்டாம் என்றார்கள். அவங்க செய்த நன்மையை எதிர்பார்ப்பில்லாமல் செய்வாங்க, மன நிறைவோடு இருப்பாங்க, பிரச்சனை வரும்போது கடவுள் பார்த்துக் கொள்வார் என்ற நம்பிக்கையோடு இருப்பாங்க.

தனக்கு ஒரு தேவை மற்றும் பிரச்சனை என்றால் யாரிடம் கேக்கனும் என்ற பக்குவம் உடையவர்கள். தன்னால் முடிந்த அளவுக்கு பிறருக்கு உதவி செய்யக்கூடியவர்கள், தனக்கு கிடைக்கும் நன்மைக்கு நன்றி சொல்லக் கூடியவர்கள்.

கடவுளுக்கு பிரியமான செல்லங்களா! நீங்களும் இந்த சூனேமியாள் அக்காவைப்போல இந்த வருடத்தில் கடவுள் மீது நம்பிக்கையாயிருப்பீர்களா? பிறருக்கு நன்மை செய்வீர்களா? உங்களுக்கு கிடைக்கும் நன்மைக்கு நன்றி சொல்வீர்களா! கடவுள் உங்களை ஆசீர்வதிப்பார்.

**மனப்பாட வசனம்: எபேசியர் 1:3**

"நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம். அவர் கிறிஸ்துவுக்குள் உன்னதங்களில் ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தினாலும் நம்மை ஆசீர்வதித்திருக்கிறார்."

– சகோ. அன்பு ஏசுதாஸ்

## மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்திய
# தாவீது ராஜா!!


கர்த்தருக்குள் அன்பான செல்லப்பிள்ளைகளா!!! அனைவரும் நலமாக இருக்கின்றீர்களா? உங்கள் யாவருக்கும் கர்த்தருடைய நாமத்தினாலே 2026 -ஆம் ஆண்டின் இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்!!!. பரிசுத்த கர்த்தர் தாமே உங்கள் அனைவருடனும் இருந்து உங்களை ஆசிர்வதிப்பாராக..

இந்த வருடத்தின் முதல் மாதத்திலே பூமியில் வாழ்ந்த ராஜாக்களிலேயே மிகப்பெரிய ராஜ்ஜியத்தை ஆட்சி செய்த தாவீது ராஜாவைக் குறித்தும், அவருடைய செயல்களில் மிகவும் கவனிக்கப்படவேண்டிய முக்கியமான நிகழ்வாக கருதப்படும் மக்கள் தொகை கணக்கெடுப்பையும், தாவீது ராஜா அமைத்த அரசாங்கத்தைக் குறித்தும் நாம் படிக்க உள்ளோம். எல்லாரும் படிக்கலாமா? வாங்க படிக்கலாம்.

ஆடு மேய்க்கும் மேய்ப்பனாக இருந்து கர்த்தரின்மேல் மிகுந்த நம்பிக்கை கொண்டவனாக வளர்ந்து இஸ்ரயேலின்மேல் போர் தொடுக்க வந்திருந்த பெலிஸ்தரின் படையை ஒற்றை ஆளாக எதிர்த்து நின்று, கோலியாத்தை ஒரே ஒரு கூழாங்கல்லாலே அடித்துக் கொன்று இஸ்ரயேலின் ராஜாவாக ஏற்படுத்தப்பட்டவர்தான் தாவீது ராஜா. கர்த்தருக்குப் பிரியமான பிள்ளையாக வளர்ந்து இஸ்ரயேல் தேசத்தின் ராஜாவாக வளர்ந்தவர். கர்த்தருக்குப் பிரியமான செல்லப் பிள்ளைகளா!!! கர்த்தருக்குப் பிரியமாக வாழ்வதினால் கிடைக்கும் உயர்விற்கு தாவீது ஒரு மிகச் சிறந்த உதாரணம்.

தாவீது அரசாண்ட நாட்களிலே, சாத்தான் இஸ்ரயேல் தேசத்திற்கு விரோதமாக எழும்பி இஸ்ரயேலைத் தொகையிடுவதற்கு அதாவது இஸ்ரயேல் மக்கள் தொகையைக் கணக்கிடும்படி தாவீதை ஏவினான். அப்படியே தாவீது யோவாபையும் மக்களின் சேர்வைக்காரரையும் நோக்கி; நீங்கள் போய் பெயெர்செபா தொடங்கி தாண் என்கின்ற ஊர் இருக்கின்ற இடம் வரைக்கும் உள்ள இஸ்ரயேல் மக்கள் ஒவ்வொருவரையும் எண்ணிக்கை எடுத்து அவர்களுடைய எண்ணிக்கையை என்னிடத்தில் அறிவியுங்கள் என்று தாவீது அவர்களிடம் கட்டளை கொடுத்தான். அதற்கு யோவாப் கர்த்தருடைய மக்கள் இப்பொழுது இருக்கிறதைப் பார்க்கிலும் நூறு மடங்கு கர்த்தர் அவர்களைப் பெருகப் பண்ணுவாராக, ஆனாலும் ராஜாவாகிய என் ஆண்டவனே, அவர்கள் அனைவரையும் தொகையிடுவது சரியா? என்று கர்த்தருடைய வார்த்தையை முன்னிட்டு பேசினான் ஆனாலும் கட்டளையிட்டது தாவீது ராஜா என்பதினால், யோவாப் தன்னுடைய அரசனின் கட்டளைக்கு கீழ்ப்படிந்து இஸ்ரயேல் மக்களின் எண்ணிக்கையை ராஜாவிற்கு தெரிவித்தான். ஆனாலும் ராஜாவினுடைய வார்த்தை யோவாபுக்கு அருவருப்பாய் இருந்தது என்று பைபிள் சொல்லுகிறது.

இந்தக் காரியம் கர்த்தருடைய பார்வைக்கு ஆகாததாய் இருந்தபடியினால், கர்த்தர் இஸ்ரயேலை வாதித்தார் அதாவது தண்டித்தார் என்று பைபிள் சொல்லுகிறது.



அப்பொழுது தாவீது கர்த்தரை நோக்கி நான் இந்தக் காரியத்தை செய்ததினால் மிகப்பெரிய பாவம் செய்தேன். என்னுடைய பாவத்தை நீக்கிப்போடும் என்று கர்த்தரை வேண்டிக்கொண்டான். அப்பொழுது கர்த்தர் காத் என்னும் பெயர் உள்ள தீர்க்கதரிசியிடம் நான் உனக்கு சொல்லும் மூன்று காரியங்களை சொல்லுகிறேன் அதில் ஏதேனும் ஒன்றை தெரிந்துகொள் என்று தாவீது ராஜாவிடம் தெரிவி என்று சொன்னார். தீர்க்கதரிசியாகிய காத் அப்படியே அந்த மூன்று காரியங்களை அறிவித்தான். அந்த மூன்று காரியங்கள் 1. மூன்று வருடத்திற்கு இஸ்ரவேல் தேசம் எங்கும் கொடிய பஞ்சம். 2.இஸ்ரயேல் தேசத்தின் எதிரி நாட்டினர் கைகளில் ஒப்புவிக்கும் மூன்று மாதத்திற்கான சங்காரம். 3. அல்லது மூன்று நாளைக்கு கர்த்தருடைய தூதன் இஸ்ரயேல் தேசம் முழுவதும் உண்டாக்கும் கொள்ளை நோய் என்னும் சங்காரமோ என்று கர்த்தர் அறிவித்தார்.

அப்பொழுது தாவீது காத் என்னும் தீர்க்கதரிசியை நோக்கி, கொடிய இடுக்கண்ணில் சிக்கியுள்ளேன், நான் கர்த்தருடைய கையில் விழுவேன் என்று மூன்றாவதாக உள்ள தண்டனையை தேர்ந்தெடுத்தார். கர்த்தரும் இஸ்ரயேலில் கொள்ளை நோயை வரப்பண்ணினார், அதினால் இஸ்ரயேலில் எழுபதினாயிரம் பேர் மடிந்தார்கள். எருசலேமையும் அழிக்கும்படி கர்த்தர் ஒரு தூதனை அனுப்பினார். ஆனாலும் கர்த்தர் மனஸ்தாபப் பட்டு சங்கரிக்கார தூதனை நோக்கி உன் கையை நிறுத்து என்றார்.

கர்த்தருக்குப் பிரியமான செல்லப் பிள்ளைகளா!!! கர்த்தருக்கு எத்தனை நாட்கள் பிரியமாக நடந்துகொள்ள வேண்டும்? அல்லது எத்தனை வருடம் கர்த்தருடைய வசனத்திற்கு கீழ்ப்படிய வேண்டும்? இந்தக் கேள்விக்கு பதில் நம்முடைய வாழ்நாள் முழுவதும் கீழ்ப்படிய வேண்டும் என்பதே பதில். நம்முடைய கர்த்தர் பாராக்கிரமும் அன்பும் நிறைந்தவர். அவருடைய வார்த்தைகளுக்கு மாத்திரம் இந்த வருடமும் வருகின்ற அனைத்து வருடங்களிலேயும் கீழ்ப்படிந்து கர்த்தருடைய முழுமையான ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்வோமா!!!

**மனப்பாட வசனம்: மத்தேயு 28:20**

“நான் உங்களுக்குக் கட்டளையிட்டயாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே இருக்கிறேன் என்றார். ஆமென்.”

**– சகோ. சந்தோஷ்குமார் மாகாளியப்பன்**

## ஜனவரி மாத கேள்விகள்
## (மாற்கு சுவிசேஷ புத்தகத்தில் இருந்து)

1. தன் ஜென்ம நாளில் விருந்து பண்ணியவன் யார்?
2. எப்பத்தா என்பதன் அர்த்தம் என்ன?
3. எனக்குப் பின்னாகப் போ சாத்தானே யார் யாரிடம் கூறியது?
4. யாருக்கு எல்லாம் கூடும் என்று இயேசு கூறினார்?
5. எந்த மனுஷனும் எதினால் உப்பிடப்படுவான்?
6. தேவனுடைய ராஜ்யம் எப்படிப்பட்டவர்களுக்குரியது?
7. யார் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பது அரிதாயிருக்கும்?
8. இயேசுவே தாவீதின் குமாரனே எனக்கு இரங்கும் என்று கூப்பிட்டவன் யார்?
9. இயேசுவை பேச்சில் அகப்படுத்தும்படி அவரிடத்தில் அனுப்பப் பட்டவர்கள் யார்?
10. தன் வறுமையிலிருந்து காணிக்கை போட்டவள் யார்?

**பதில்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் : 05-02-2026**

அனுப்ப வேண்டிய முகவரி : **சகோதரி. பேபி ராஜா**
45C/1, சர்ச் லேன், காரனேசன் தெரு,
அரசரடி, மதுரை - 625 016.
செல் : 92 4421 4421, 92 4431 4431

### சென்ற இதழின் பதில்கள்

| | |
|---|---|
| 1. மாற்கு 1:3,4 | 6. மாற்கு 2:25,26 |
| 2. மாற்கு 1:12 | 7. மாற்கு 3:17 |
| 3. மாற்கு 1:16,17 | 8. மாற்கு 4:15 |
| 4. மாற்கு 1:34 | 9. மாற்கு 5:25,33 |
| 5. மாற்கு 2:14 | 10. மாற்கு 6:4 |

### சென்ற இதழின் கேள்விகளுக்கு பதில் எழுதியவர்கள்

| | | |
|---|---|---|
| 1) | Mrs. ஹெலன் திலக் | தூத்துக்குடி |
| 2) | C. வைலட் கிறிஸ்டோபர் | தளவாய்புரம் |
| 3) | R. ஞானசிரோன்மணி | மதுரை |
| 4) | Dr. இவாஞ்சலின் ஜோன்ஸ் | சேலம் |
| 5) | J. கிறிஸ்டோபர் சாந்தகுமார் | மதுரை |
| 6) | S. பாக்கியராஜம் | மதுரை |
| 7) | Mrs. சூரிய பிரியா | மதுரை |
| 8) | Mrs. ராணி குமரன் | கரூர் |
| 9) | Mrs.D. குளோரி திலகவதி | சென்னை |
| 10) | Mrs. J. பூங்கொடி ரவி | முத்தூர் |
| 11) | M. ஈஸ்வரி முருகன் | கரூர் |
| 12) | M. ராஜா | கரூர் |
| 13) | S. கார்த்திக் | கரூர் |
| 14) | Mrs. C. வள்ளி சிதம்பரம் | கரூர் |
| 15) | Mrs.P. சமாதானம் பீட்டர் | விருதுநகர் |
| 16) | Mr. தாமஸ் ராபின்சிங் | பெரம்பலூர் |
| 17) | Mrs. ஹெப்ஸிபா தாமஸ் | படப்பை |
| 18) | A. கார்பஸ் பிலேமோன் | மதுரை |
| 19) | Mrs. தேவி ராஜாசிங் | திருப்பூர் |
| 20) | S. ஜெபமணி | தென்காசி |
| 21) | Mrs. சாந்தி வில்லியம் | புதுக்கோட்டை |
| 22) | Mrs. தெல்மா ஸ்டான்லி | மதுரை |
| 23) | A. லலிதா | புதுக்கோட்டை |
| 24) | S.G. சேகர் | ராணிபேட்டை |
| 25) | Mrs. பிளாரன்ஸ் முத்தையா | மதுரை |
| 26) | A. டேவிட் ஜெயசந்திரன் | மதுரை |
| 27) | Mrs. ஆட்லின் ஆனந்தன் | மதுரை |
| 28) | A. அரவிந்த் | மதுரை |
| 29) | Mrs. பெட்ரீஷியா டேவிட் | சேலம் |
| 30) | Mrs. இந்திரா பாண்டி | மதுரை |
| 31) | N. ஜான் செல்லையா | மதுரை |
| 32) | Mrs. J. ஜெயராணி ஜான் | மதுரை |
| 33) | S. பேபி சந்தோஷ்குமார் | தங்கமேடு |
| 34) | J. ஜான்சி | ஆனைமலை |
| 35) | Mrs. A. இமல்டா சுந்தர்சிங் | ஈரோடு |
| 36) | Mrs. R. சரோஜா | தென்கலம் |
| 37) | Mrs. சாந்தி ஜோயல் | திருச்சி |
| 38) | S. ஷீபா ஞானவின்சா | டோனாவூர் |
| 39) | G. ஏஞ்சலம்மாள் | மதுரை |
| 40) | Mr. டேவிட் ராஜ் | அனவரதநல்லூர் |
| 41) | J.V. சுந்தரபாய் வில்லியம் | சேலம் |
| 42) | Mrs. பெரில் பாஸ்கர் | படப்பை |
| 43) | Mrs. ஸ்டெல்லா ஜெபக்குமார் | நெல்லை |
| 44) | J. கிறிஸ்டோபர் தாஸ் | நாகர்கோயில் |
| 45) | Mrs. பியூலா ஜேசுராஜன் | புதுவை |
| 46) | Y. ஜெயசுதா பொன்செல்வி | சென்னை |

தொடர்ந்து இப்பகுதியில் பங்குபெறும் அனைவருக்கும் வாழ்த்துக்கள் !

Place of Publication : 45 C/1, CHURCH LANE, CORONATION STREET, ARASARADI, MADURAI - 16.
Printed & Published by P.C. PHILEMON RAJAH
Printed at THEE CLASSIC PRINTERS, 27, KAKA THOPPU, MADURAI - 1 📖 94421 23819
Registered News Paper No. : TNTAM/2011/42166
Postal Registration No. : TN/MA/67/2024 - 2026
Date of Publication : 9th January 2026
Posted at Arasaradi HPO on 10th & 11th January 2026


## கிருபையுள்ள வார்த்தை வெளியிட்டுள்ள சிறப்பு புத்தகங்கள்




அன்பார்ந்த வாசகர்களே! இந்த அனைத்து புத்தகங்களையும் உங்கள் ஆத்மீக வளர்ச்சிக்கு பயன்படுத்திக்கொள்ளும்படி வேண்டுகிறோம். ரூபாய் 100/- மட்டும் அனுப்பி இப்புத்தக தொகுப்பை பெற்றுக்கொள்ளுங்கள்!

## தபால் வழி பைபிள் பாடங்கள்



## கைபிரதிகள்



உங்கள் சுவிசேஷ ஊழியத்திற்கு கைபிரதிகள் பல்வேறு தலைப்புகளில் பாதி விலையில் கிடைக்கும். விபரங்களுக்கு : 92 4421 4421, 92 4431 4431

## BIBLE STUDY BOOKS IN ENGLISH







AVAILABLE FOR SPECIAL PRICE!


If undelivered please return to :

EDITOR
KIRUBAIYULLA VAARTHAI
P.O. Box No. 15, Arasaradi,
Madurai - 625 016. India
biblecourseindia@gmail.com
@graciouswordcoc
92 4421 4421, 92 4431 4431

To

Visit www.graciousword.org to read kv magazine online
follow us in facebook : NT Gospel Restorers